தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1972 ஆகஸ்ட் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. எச். எஸ். டவுன் அவர்கள் மறைவு குறித்து

MR. DEPUTY SPEAKER : It is my painful duty to inform the House of the demise of Thiru H. S. Town on 23rd June 1972 in the United Kingdom. He was a former Member of the Legislative Assembly of the then Composite State of Madras from 1939 to 1947 representing Eurepean Commerce, the Madras Chamber of Commerce and the Madras Trades Association.

On behalf of the House, I will convey the condolences to the members of the bereaved family.

I request Hon. Members to stand in silence for a minute as a mark of respect to the departed soul.

The Members stood in silence for a minute.

(2) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

குடிநீர் வழங்கு திட்டங்கள்

* 116 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோயம்புத்தூர் நெல்லித்துறை குடிநீர் திட்டத்திற்கு உலக வங்கியிடம் அரசு ஏதேனும் நிதி உதவி கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், உலக வங்கி பணம் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளதா?

[1972 ஆகஸ்ட் 17

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) கோயம்புத்தூர், சிங்காநல்லூர், உட்பட 13 ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்க வகை செய்வதற்கான நெல்லித்துறை நீர்வழங்கு திட்டத்திற்காக உலக வங்கிக் குழுவினருடன் விவாதிக்கப்பட்டது. தமிழ்நாடு நீர்வழங்கு—கழிவுநீர் அகற்று வாரியம் திட்டத்தைக் கூர்ந்த ஆய்வுக்காக அனுப்ப வேண்டுமென்று உலக வங்கிக் குழு கோரியது. நீர்பகிர்வு முறையின் போதுமானம், திட்டத்திற்கான நிதியுதவி, திட்டத்தின் பொருளாதார ஊற்றம் போன்ற இத்திட்டத்தின் சில கூறுகளைப் பற்றிய விவரங்களை உலக வங்கிக் குழு கேட்டது. உலக வங்கிக் குழுவினரால் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் திட்டத்தை வகுத்த பிறகு, இந்திய அரசின் மூலமாக இத்திட்டம் உலக வங்கிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(இ) இது குறித்து திட்டவட்டமான பொறுப்பு எதையும் உலக வங்கிக் குழுவினர் மேற்கொள்ளவில்லை.

திரு. கே. என். குமாரசாமி: உதவித் தலைவர் அவர்களே, இத் திட்டம் குறித்து 1972-ம் ஆண்டுக்குள்ளாக ஒரு முடிவுக்கு வந்து, கோயம்புத்தூர், சிங்காநல்லூர், பல்லடம் போன்ற பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்காகத்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தந்தப் பேரூராட்சி மன்றங்கள் நிதி திரட்டிக்கொடுக்கின்ற சக்தி எவ்வளவு படைத்திருக்கின்றன என்பதையெல்லாம் நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். இதுகுறித்து உலக வங்கியினிடமும் தொடர்பு கொண்டிருக்கிறோம். உலக வங்கி இதற்கான சரியான பதிலையோ அல்லது திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற அளவிலோ கூறிவிடுமானால், பிறகு எல்.ஐ.சி. மூலம் கடன் பெற நாம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

* 117 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி குடிநீர்த்திட்டத்திற்கு வேண்டிய மின்சாரப் பம்புசெட்டு எந்த கம்பெனியில் வாங்கப்பட்டது?

(இ) அதற்கு உத்திரவாதம் ஏதும் அளிக்கப்பட்டிருக்கிறதா?